# Impact of regional language difference and linguistic knowledge of parents on children's reading ability. (An Action Research)

# பிள்ளைகளின் வாசிப்புத் திறனில் பெற்றோர்களின் மொழியறிவினதும் பிரதேச மொழி வேறுபாட்டினதும் தாக்கம்.

A.S.P.Yumna
Department of Education and child care, Eastern University, Sri Lanka.
Email: asp.yumna@gmail.com

**ஆய்வுச் சுருக்கம் :** இன்றைய கால கட்டத்தில் கல்வி இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது. ஒரு பிள்ளை இத்தகைய கல்வியை குடும்பம், தான் வாழும் சூழல் மற்றும் பாடசாலை என்பவற்றிலிருந்து பெற்றுக் கொள்கிறது. கல்வியைக் கற்கின்ற போது ஒருவரிடத்தில் மொழித்திறன் விருத்தி ஏற்படுகின்றது. இங்கு மொழித்திறன் விருத்தியானது எழுத்துத் திறன், வாசிப்புத் திறன், செவிமடுத்தல் திறன், பேச்சுத் திறன் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. இவ்வாறான மொழித்திறன் ஒவ்வொருவரிடமும் உயர்வான நிலையில் காணப்படும் பொழுது கற்றல் சிறப்பாக அமையும். அந்த வகையில் மாணவர்களிடத்தில் காணப்படும் வாசிப்புத் திறன் தொடர்பாக ஒரு செயல்நிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதற்காக இலங்கையில் கம்பஹா மாவட்டத்திலுள்ள தமிழ்மொழி மூல 1C பாடசாலை ஒன்று வசதி மாதிரி எடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டது. இதற்கான மாதிரியாக தரம் 7 இல் கல்வி கற்கும் 6 மாணவர்கள் நோக்க மாதிரியின் அடிப்படையிலும் இரண்டு உதவி ஆசிரியர்களும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் இவ்வாய்வு செயல்நிலை ஆய்வு என்பதனால் தரம் 07 பாடநூல், தரம் 05 பாடநூல், சிறிய கதைகள் அடங்கிய பிரதிகள், செயற்பாட்டு பத்திரங்கள், காணொளிகள் mobile apps ஆகிய ஆய்வுக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. இவ்வாய்வின் முடிவாக, பெற்றோர்களின் மொழியறிவும், சுற்றியுள்ள பிரதேசச் சூழலும் மாணவர்களின் வாசிப்புத் திறன் பின்னடைவுக்கான காரணங்களில் முக்கிய இடத்தை வகிக்கின்றன என்பது கண்டுடறியப்பட்டது. இதனை நிவர்த்தி செய்வதற்கு நவீன தொழினுட்ப கற்றல் கற்பித்தல் துணைச்சாதனங்களைப் பயன்படுத்தல், பிள்ளைகள் அதிகம் விரும்பி வாசிக்கும் விடயங்களைத் தொகுத்தல், பரிகாரக் கற்பித்தலை மேற்கொள்ளல், பிள்ளைகளின் பொழுதுபோக்கு அம்சங்களில் கூடிய ஈடுபாடு காட்டல் போன்றவாறான வழிகாட்டல் ஆலோசனைகள் மற்றும் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

## அறிமுகம்

வாசிப்பு ஒரு மனிதனைப் பூரணப்படுத்துகிறது. வாசிப்பின் மூலமே மாணவன் தனது அறிவைப் பெற்றுக்கொள்கிறான். தொடர்ந்து வாசிப்பதன் மூலமே தனது அறிவை, ஆற்றலை விருத்தி செய்ய அவனால் முடிகிறது. இவ்வாறான விருத்தி பிள்ளையின் அறிவுசார் விருத்தியில் பெரும் பங்கினை வகிக்கின்றது. வாசிப்பு ஒரு மனிதனை ஏனையோர்களில்

தங்கியிருப்பதிலிருந்து விடுபட்டு அவனை ஒரு சுதந்திர மனிதனாக மாற்றுகின்றது. ஆசிரியர் கற்றுக் கொடுப்பது தவிர்ந்து மேலதிகமான விளக்கங்களை பகுத்தாராய்ந்து சிந்திக்கும் ஆற்றலை பல்வேறு வகையான நூல்களை வாசிப்பதன் மூலமே மாணவன் பெறுகின்றான். அந்தவகையில் மொழித்திறன் விருத்தியில் உள்ளடங்கும் விடயங்களில் ஒன்றான வாசிப்புத்திறன் விருத்தியில் பின்தங்கியுள்ள மாணவர்களை இனங்கண்டு, அதற்கான காரணங்களைக் கண்டறிந்து, அவர்களுக்கான பரிகாரக் கற்பித்தல்களை மேற்கொள்வதற்காக இச் செயல்நிலை ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

மாணவனின் கண்ணும், காதும் ஒன்றாகப் பயிற்றப்படாமல் இருப்பதால் வாசிப்பு மாணவர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்துகிறது. சில மாணவர்கள் எந்த விடயத்தையும் கற்க ஆர்வமற்றவர்களாக உள்ளனர். பரீட்சையில் பாடங்களில் போதிய விளக்கமிருந்தும் வாசிக்க முடியாத காரணத்தினால் பரீட்சையை ஒழுங்காக எழுதத்தவறுகின்றனர். இதற்கு காரணம் வாசிப்புத் திறன் குறைவடையும் போது கிரகிக்கும் திறன் மற்றும் எழுத்துத் திறன் என்பன பாதிக்கப்படுகின்றன. மேலும் ஆசிரியர் தனக்கு வழங்கப்பட்ட 40 நிமிடங்களில் அனைத்து மாணவர்களுக்கும் ஏற்ற வகையில் கற்பித்தலை மேற்கொள்வது என்பது வகுப்பறை மட்டத்தில் எழும் பாரிய பிரச்சினையாக உள்ளது. அந்தவகையில் மாணவர்கள் சிறப்பாக வாசிக்காத விடத்து அவர்களது பாடவிடயத்தை சிறப்பாக விளங்கிக் கொள்ள முடியாது. இதனால் கற்பித்தலையும் மேற்கொள்ள முடியாது ஆசிரியர்கள் சிரமப்படுவதோடு மாணவர்களின் அடைவ மட்டங்களும் குறைகின்றன. எனவே மாணவர்களின் வாசிப்புத்திறனில் பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்தக்கூடும். அதில் பெற்றோர்களின் மொழியறிவும் பிரதேச மொழிவேறுபாடும் தாக்கத்தை ஏற்படுத்தும். அந்த வகையில் இது ஆராயப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

**ஆய்வின் முக்கியத்துவம்**

பாடசாலை என்பது மாணவர், ஆசிரியர், பெற்றோர் என்ற மூன்று தரப்பினரையும் கொண்டமைந்ததாகும். எனவே பாடசாலையில் எழும் எந்தப் பிரச்சினையும் இம் மூன்று பிரிவினர்களிலும் தாக்கம் செலுத்தும். கனிஷ்ட இடைநிலைப் பிரிவிலுள்ள இம் மாணவர்கள் அடுத்த கட்டமாக க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு முகங்கொடுக்க வேண்டிய மாணவர்கள். கேள்விகளை வாசித்து கிரகிக்கும் திறன் மேம்படுவதன் மூலம் சிறந்த பெறுபேற்றை அடைய முடியும். எனவே வாசிப்புத் திறன் குறைபாடுள்ள மாணவர்களுக்கு தீர்வு காணும் வகையில் இச் செயற்திட்டம் அமையப்பெற்றுள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

மொழித்திறன் விருத்தியில் உள்ளடங்கும் விடயங்களில் ஒன்றான வாசிப்புத்திறன் விருத்தியில் பின்தங்கியுள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கான பரிகாரக் கற்பித்தல்களை மேற்கொள்ளல்.

**சிறப்பு நோக்கங்கள்**

1. மாணவர்களின் வாசிப்புத் திறன் தொடர்பாக மாணவர்களிடமுள்ள தற்போதைய நிலைமையினை இனங்காணுதல்.
2. மாணவர்களின் வாசிப்புத் திறன் பின்னடைவிற்கான காரணங்களைக் கண்டறிதல்.
3. வாசிப்புத் திறன் விருத்திக்கு நவீன கற்பித்தல் துணைச் சாதனங்களைப் பயன்படுத்தி பயிற்சிகளை வழங்கல்.
4. ஆசிரியர் மற்றும் பெற்றோருக்கு வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்கல்.
5. வகுப்பறைக் கற்றல் கற்பித்தலை இலகுபடுத்தல்.

**இலக்கிய மீளாய்வு**

வாசிப்பு ஒரு மனிதனை விடயம் தெரிந்த, அறிவு பெற்ற மனிதனாக உருவாக்கும். ஒரு மனிதன் தான் வேலை செய்யும் இடத்தில் திறன்பட செயற்படுவதற்கும் வினைத்திறனுடைய வேலை செய்வதற்கும் வாசிப்பு அவசியம் எனக் குறிப்பிட்டுள்ளார் (ஹமீர், 2014).

உயர் உள ஆற்றலைக் கொண்ட பிள்ளைகள், மொழியாற்றலில் குறிப்பான சிறந்த வெளிப்பாட்டைக் காட்டுவர். சூழல் தொடர்பான விடயங்கள் மொழி வளர்ச்சிக்கு முக்கியமானதாகும். சிறப்பான மொழி வளர்ச்சிக்கு போதியளவான, பொருத்தமான தூண்டிகள் வீட்டுச் சூழலில் இருக்க வேண்டும். இவற்றுள் குறிப்பிடத்தக்க சில தூண்டிகளாவன,

- கதைப்புத்தகங்களை தாய்மார் வாசித்துக்காட்டல்.
- பாடல் பாடிக் காட்டல்.
- குழந்தைகள் வளர்ந்தோருடன் இடைத்தாக்கம் புரிதல் (அருள்மொழி, 2010).

பேர்ணஸ்ரீன் (1966) இன் கருத்துப்படி, மொழி வளர்ச்சியடைவதற்கு சமூக வகுப்பு முக்கிய காரணமாக இருக்கின்றதெனக் குறிப்பிடுகின்றார். இவரது கருத்துப்படி வெவ்வேறு சமூக வகுப்புக்களைச் சேர்ந்த பிள்ளைகளின் உள்ளார்ந்த ஆற்றல் மொழித் திறன்களிலே வேறுபட்ட முறையில் வலியுறுத்தப்படுகின்றன. வளமற்ற மொழிப் பயன்பாடு மொழியை ஓர் அறிவுசார் வளர்ச்சிக்கான வினைத்திறன்மிக்க கருவியாக வருவதைத் தடைசெய்கின்றது. மேலும் பிள்ளைகளிடையே இரு பிரதான பேச்சு வகைகள் இருப்பதாக இவர் கூறுகின்றார்.

- கட்டுப்படுத்தப்பட்ட குறியீடு – கட்டுப்படுத்தப்பட்ட குறியீடு கீழ் நிலையிலுள்ள சமூக பொருளாதார வகுப்புகளுக்கிடையே பயன்படுத்தப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். பெரும்பாலும் கட்டளைகளைக் கொடுக்கவும் அக்கட்டளைகளுக்கான பதில்களாகவும், நாளுக்குரிய தகவல் பரிமாற்றமாகவும் இவர்களடைய பேச்சு முறை அமைகிறது.

- விரிவுபடுத்தப்பட்ட குறியீடு - மத்தியதர வகுப்பைச் சேர்ந்த சமூக பொருளாதார வகுப்புக்களிடையே விரிவுபடுத்தப்பட்ட குறியீட்டு பேச்சுமுறை நடைபெறுகின்றது. இக் குடும்பங்களிலே வீடுகள் போதியளவிற்கு மொழியை உபயோகிப்பதற்கான சந்தர்ப்பங்கள், வாசிப்பதற்கான நூல்கள் என்பவற்றை வழங்குவது மட்டுமன்றி கற்றலுக்கான மனப்பாங்கும் சாதகமாக இருக்கின்றன (அருள்மொழி, 2010).

**ஆய்வு முறையியல்**

இச் செயல்திட்டமானது செயல்வழி ஆய்வுச் செயன்முறையாகும். தரம் 7 இல் கல்வி கற்கும் வாசிப்புத் திறன் குறைபாடுடைய மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, பரிகாரக் கற்பித்தல் முறையில் அமைந்த ஒரு செயற்திட்டமாகும். இலங்கையில் கம்பஹா மாவட்டத்திலுள்ள தமிழ் மொழி மூல 1C பாடசாலை ஒன்று வசதி மாதிரி எடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டது. இச் செயற்திட்ட ஆய்வு நான்கு வாரக் காலப்பகுதிக்குள் மேற்கொள்வதற்கு ஆய்வாளனால் தீர்மானிக்கப்பட்டதற்கு இணங்க இலக்குக் குடியிலிருந்து சிறியளவினரே ஆய்வு மாதிதிகளாக தெரிவு செய்யப்பட்டனர். அந்த வகையில் தரம் 7 இல் கல்வி கற்கும் 6 மாணவர்கள் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டதோடு எழுமாற்று அடிப்படையில் இரண்டு உதவி ஆசிரியர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாய்வு செயல்நிலை ஆய்வு என்பதனால் தரம் 07 பாடநூல், தரம் 05 பாடநூல், சிறிய கதைகள் அடங்கிய பிரதிகள், செயற்பாட்டு பத்திரங்கள், காணொளிகள் mobile apps ஆகிய ஆய்வுக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. ஆய்வாளன் தான் திட்டமிட்ட செயற்பாடுகளின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற தகவல்கள் மூலம் முடிவுகள் எட்டப்பட்டன.

**ஆய்வாளனால் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள்.**

1. முற்சோதனையை நடாத்துதல்.
2. வாசிப்பில் அதிக பிழைகளை விடக் கூடிய பகுதியை இனங்காணல்.
3. பெற்றோர் கூட்டத்தை ஏற்பாடு செய்தல்.
4. உயிர்மெய் எழுத்துக்களை வாசிப்பதில் விடும் பிழைகளை இனங்காணல்.
5. செயற்பாட்டு பத்திரங்கள் மூலம் மாணவர்களுக்கு பயிற்சியளித்து கணிப்பீடு செய்தல்.
6. கவர்ச்சிகரமான முறையில் வாசிப்புப் பயிற்சியளித்தல்.
7. இறுதி மதிப்பீடு.

**தரவுப் பகுப்பாய்வும் வியாக்கியானமும்**

**முற்சோதனையை நடாத்துதல்**

வாசிப்பின் முக்கியத்துவம் மேலும் மேலும் வளர்ச்சியடைந்து வரும் சமகாலச் சூழலில் வாசிப்புத் திறன்களைச் செம்மையுற வளர்க்க வேண்டிய பெரும் பொறுப்புடன் பாடசாலைகள் இயங்க வேண்டியுள்ளன. அந்த வகையில், தரம் 7 இல் 15 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அவர்களின் வாசிப்புத் திறனை அறிவதற்காக முற்சோதனை ஒன்று நடாத்தப்பட்டு புள்ளிகள் பெறப்பட்டன. அதாவது தமிழ்ப் பாடப் புத்தகத்தில் உள்ள கட்டுரைப் பகுதிகள் வழங்கப்பட்டு கட்டம் கட்டமாக வாசிப்பு கேட்டு முற்சோதனை நடாத்தப்பட்டது. இதற்கமைய திட்டமிடப்பட்ட

நியதிகளுக்கமைவாக முற்சோதனை வெட்டுப்புள்ளி 50 ஆக தீர்மானிக்கப்பட்டு 50 ற்கு கீழ் புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் 06 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

**வாசிப்பில் அதிக பிழைகளை விடக் கூடிய பகுதியை இனங்காணல்.**

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் வாசிப்பில் பிழைவிடும் பகுதிகள் அனைத்திற்கும் பரிகாரம் காணும் வகையில் செயற்திட்டத்தை மேற்கொள்வதற்கு காலம் போதாமையால் அதிகமாக பிழைகளை விடக்கூடிய பகுதியைத் தெரிவு செய்வதற்காக

- நிறுத்தற் குறிகள் அதிகமாக அடங்கிய பந்திகள்
- ஒலி வேறுபாட்டு சொற்கள் அடங்கிய பட்டியல்
- உயிர்மெய் எழுத்துப் பயிற்சிகள் போன்றன வழங்கப்பட்டன.

இவற்றில் உயிர்மெய் எழுத்துக்களை (குறில் நெடில்) சரியாக இனங்காண்பதில் மாணவர்கள் கூடுதலாக இடர்பட்டதை அறிய முடிந்தது.

**பெற்றோர் கூட்டத்தை ஏற்பாடு செய்தல்.**

இச் செயல்நிலை ஆய்வை சிறப்பாக மேற்கொள்வதற்காக பெற்றோர் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இக் கூட்டத்தில் செயற்திட்டத்தின் நோக்கம், இதற்காக மேற்கொள்ளப்படவுள்ள செயற்பாடுகள் கலந்துரையாடப்பட்டதுடன் வாசிப்பில் தங்கள் பிள்ளைகளின் நிலை பற்றி பெற்றோருக்கு எடுத்துக்காட்டப்பட்டது. வீட்டில் மாணவர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக சிறுவர் கதைகள் மற்றும் சிலவற்றைத் தொகுத்தெடுத்து அவற்றின் பிரதிகளை வழங்கி பெற்றோர் மேற்பார்வை செய்ய ஒரு படிவமும் தயார்படுத்திக் கொடுக்கப்பட்டது.

**உயிர்மெய் எழுத்துக்களை வாசிப்பதில் விடும் பிழைகளை இனங்காணல்.**

வாசித்தலுக்கு அடிப்படையாக அமைவது எழுத்துக்களை இனங்காணும் திறனாகும். எழுத்துக்களை இனங்காணல் எளிதாகும் பொழுது, அதற்கெனச் செலவிடப்படும் மூளைவலு (Mental Energy) விடுவிக்கப்படுகிறது. மீதப்படுத்தப்படும் உளவலு வாசிப்புக்குரிய நுழைவாயிலை எளிதாக்கி விடுகின்றது. சில எழுத்துக்களிடையே காணப்படும் எழுத்து வடிவ இணக்கப்பாடு வாசித்தலில் சிக்கலை ஏற்படுத்தி விடுகிறது. எடுத்துக்காட்டாக பா, டா, து, நு முதலியவற்றைக் குறிப்பிடலாம். சொற்கள் ஒலிகளால் ஆக்கப்படுகின்றன என்ற அனுபவத்தைப் பெறத்தவறுமிடத்து வாசித்தல் திறன்களில் பின்னடைவுகளே ஏற்படுகின்றன. தமிழ்மொழி வாசிப்பில் அரவுகளின் ஒலி வடிவத்தையும் எழுத்து வடிவத்தையும் நோக்காதவிடத்து வாசித்தல் தீவிர பாதிப்புக்கு உள்ளாகும். உதாரணமாக செல் - சொல், கற்று – காற்று, பேடு – போடு முதலியவற்றைக் குறிப்பிடலாம் (ஜெயராசா, 2007)

அந்த வகையில், மாணவர்களை இனங்கண்டு பயிற்சியளிக்க திட்டமிட்ட படி, தரம் 05 பாடநூலின் ‘‘எல்லே விளையாட்டு’’ என்ற பாடத்தில் வாசிப்பு கேட்கப்பட்டது. இச்

செயற்பாட்டின் படி ஒவ்வொரு மாணவரும் உயிர்மெய் எழுத்துக்களில் விடும் பிழைகள் இனங்காணப்பட்டன.

**அட்டவணை - 01**

| **மாணவர்கள்** | **சரியான உச்சரிப்பு முறை** | **உச்சரித்த விதம்** |
|---|---|---|
| A | தினத்தையொட்டி<br>தொடுத்தான்<br>கூறுகின்றேன் | தினத்தையெட்டி<br>தெடுத்தான்<br>கூறுகின்றன் |
| B | வீட்டிலிருந்து<br>தோன்றிய<br>ஐரோப்பிய | விட்டிலிருந்து<br>தொன்றிய<br>ஐரேப்பிய |
| C | எல்லே<br>வீரர்<br>சேர்ந்த | எல்லோ<br>விரர்<br>செர்ந்த |
| D | கேள்வி<br>கூறுவீர்களா?<br>தினத்தையொட்டி | கோள்வி<br>குறுவீர்களா?<br>தினத்தையெட்டி |
| E | எல்லே<br>சென்றான்<br>தோன்றிய | எல்ல<br>சொன்றான்<br>தேன்றிய |
| F | ஐரோப்பிய<br>தொடுத்தான்<br>வீரர் | அய்ரோப்பிய<br>தொடுத்தன்<br>விரர் |

**செயற்பாட்டுப் பத்திரங்கள் மூலம் மாணவர்களுக்கு பயிற்சியளித்து கணிப்பீடு செய்தல்.**

செயற்பாட்டு பத்திரங்களை மாணவர்களுக்கு வழங்கி கணிப்பீடு செய்யப்பட்டது. 115 சொற்கள் அடங்கிய செயற்பாட்டு பத்திரங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. பயிற்சியளிக்க முன்னர், பின்னர் கிடைக்கப்பெற்ற பிரதிபலிப்புக்களை பின்வரும் அட்டவணை எடுக்காட்டுகின்றது.

**அட்டவணை - 02**

| உயிர் குறிகள் | A | | B | | C | | D | | E | | F | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ப.மு | ப.பி | ப.மு | ப.பி | ப.மு | ப.பி | ப.மு | ப.பி | ப.மு | ப.பி | ப.மு | ப.பி |
| ஆ | 3 | - | 1 | - | 1 | - | - | - | - | - | - | - |
| ஆ, ா | 4 | 2 | 2 | - | 1 | - | - | - | - | - | - | - |
| இ, ி | 1 | - | 1 | - | - | - | - | - | - | - | - | - |
| ஈ, ீ, சுழி | - | - | - | - | 3 | 1 | 2 | - | 1 | - | - | - |
| உ, கீழ்கால் | 1 | - | 1 | - | 1 | - | 1 | - | - | - | - | - |
| ஊ, மடக்கேது | 3 | 1 | 2 | - | 1 | - | 1 | - | - | - | - | - |
| எ, ெ | 2 | 1 | - | - | - | - | 2 | 1 | 1 | - | - | - |
| ஏ, ே | 2 | - | 1 | - | 1 | - | 1 | - | - | - | - | - |
| ஐ, ை | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| ஒ, ெ…ா | 10 | 6 | 7 | 3 | 1 | - | 1 | - | 3 | 2 | - | - |
| ஓ, ே…ா | 6 | 4 | 4 | 2 | 2 | - | 3 | 2 | 3 | - | 1 | - |
| ஔ, ெ…ள | 4 | - | 2 | - | 4 | - | 1 | - | 3 | 2 | 3 | - |
| பிழையாக உச்சரிக்கப்பட்ட மொத்த சொற்கள் | 36 | 25 | 19 | 11 | 15 | 07 | 12 | 3 | 11 | 4 | 4 | - |

**கவர்ச்சிகரமான முறையில் வாசிப்புப் பயிற்சியளித்தல்.**

ஒலி மொழிக் கற்பித்தலின் (Audio Lingual Method) போது உச்சரிப்பில் மிகுந்த கவனம் எடுக்கப்படும். வாய்மொழித் திறன்களை வளர்த்துக் கொள்வதற்குரியவாறான சொற்களஞ்சிய மேம்பாட்டிலும் கவனம் செலுத்தப்படும். பேச்சுப் பயிற்சியில் ஆற்றல் பெற்ற பின்னரே வாசிப்புப் பயிற்சி வழங்கப்படும். ஒலி வேறுபாடுகளையும் ஒலி வேறுபாடுகளின் போது கருத்து வேறுபாடுகளையும் கண்டறிவதற்கான பயிற்சிகள் வழங்கப்படும். இக் கற்பித்தல் முறையில் ஆசிரியர் முக்கியமான பங்கை வகிக்க வேண்டும். சரியான பேச்சுக்கும் உச்சரிப்புக்கும் வழிகாட்டுநராக ஆசிரியரே தொழிற்பட வேண்டும். மாணவர்களை மௌனிகளாக இருக்கச் செய்யாது வாய்திறந்து மாணவர்களை பேச வைக்க வேண்டும்.


ISBN 978-624-5736-14-0

எனவே, உயிர்மெய் எழுத்துக்கள் மற்றும் அதன் ஒலியமைப்பு மற்றும் உச்சரிப்பு தொடர்பான வீடியோக்களைக் காட்சிப்படுத்தி Mobile Apps மூலம் எழுத்துக்களை இனங்காணும் பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன் விளையாட்டு முறையிலும் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. மாணவர்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். அத்தோடு சகபாடிக் கற்பித்தல் முறைகளுக்கும் பிள்ளைகள் வழிகாட்டப்பட்டன. செயற்பாட்டுப் பத்திரங்கள் மூலம் அளிக்கப்பட்ட பயிற்சிகளை விட மேற்குறிப்பிட்ட முறையில் பயிற்சியளிக்கப்பட்ட போது பிரதிபலிப்பு அதிகமாகக் காணப்பட்டது. வேகமாக எழுத்துக்களை இனங்கண்டு கொண்டனர்.

**செயற்பாடு – 07 இறுதி மதிப்பீடு.**

**அட்டவணை – 03**

| **மாணவர்கள்** | **சரியான உச்சரிப்பு முறை** | **ஆய்வை மேற்கொள்ள முன்னர் உச்சரித்த விதம்** | **ஆய்வை மேற்கொண்ட பின்னர் உச்சரித்த விதம்** |
|---|---|---|---|
| A | தினத்தையொட்டி<br>தொடுத்தான்<br>கூறுகின்றேன் | தினத்தையெட்டி ✗<br>தெடுத்தான் ✗<br>கூறுகின்றன் ✗ | தினத்தையெட்டி ✗<br>தெடுத்தான் ✗<br>கூறுகின்றேன் ✓ |
| B | வீட்டிலிருந்து<br>தோன்றிய<br>ஐரோப்பிய | விட்டிலிருந்து ✗<br>தொன்றிய ✗<br>ஐரேப்பிய ✗ | வீட்டிலிருந்து ✓<br>தோன்றிய ✓<br>ஐரோப்பிய ✓ |
| C | எல்லே<br>வீரர்<br>சேர்ந்த | எல்லோ ✗<br>விரர் ✗<br>செர்ந்த ✗ | எல்லே ✓<br>விரர் ✗<br>சேர்ந்த ✓ |
| D | கேள்வி<br>கூறுவீர்களா?<br>தினத்தையொட்டி | கோள்வி ✗<br>குறுவீர்களா? ✗<br>தினத்தையெட்டி ✗ | கேள்வி ✓<br>கூறுவீர்களா? ✓<br>தினத்தையொட்டி ✓ |
| E | எல்லே<br>சென்றான்<br>தோன்றிய | எல்ல ✗<br>சொன்றான் ✗<br>தேன்றிய ✗ | எல்லே ✓<br>சென்றான் ✓<br>தோன்றிய ✓ |
| F | ஐரோப்பிய<br>தொடுத்தான்<br>வீரர் | அய்ரோப்பிய ✗<br>தொடுத்தன் ✗<br>விரர் ✗ | ஐரோப்பிய ✓<br>தொடுத்தான் ✓<br>வீரர் ✓ |

04 வாரக் காலப்பகுதிக்குள் வழங்கப்பட்ட பயிற்சிகளின் அடிப்படையில் இறுதி மதிப்பீட்டிற்கு ஆரம்பத்தில் கொடுக்கப்பட்ட ‘‘எல்லே விளையாட்டு’’ என்ற பாடம் வாசிப்பிற்காக வழங்கப்பட்டது. இதன் போது இச் செயல்நிலை ஆய்வை மேற்கொள்ள முன்னர் காணப்பட்ட மாணவர்களின் நிலைக்கும், இவ்வாய்வை மேற்கொண்ட பின்னர் காணப்பட்ட நிலைக்கும் இடையிலான வேறுபாட்டை அறிய முடிந்தது.

**செயற்திட்டத்தை மேற்கொள்ளும் போது எதிர்நோக்கிய பிரச்சினைகள்.**

- வளப் பற்றாக்குறை – மாணவர்களுக்கு கவர்ச்சிகரமான முறையில் நவீன உபகரணங்களைப் பயன்படுத்தி பயிறசியளிக்க போதிய கற்றல் உபகரணங்கள் காணப்படவில்லை. உதாரணமாக மேற்றலை எறியி, சிறு கதை நூல்கள், இடையூறுகளின்றி செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான அறை.
- பெற்றோரின் பங்களிப்பு குறைவு – வீட்டில் பிள்ளைகளுக்கு வாசிப்பு பயிற்சியளிக்கக் கொடுக்கப்பட்ட படிவத்தை 2 பேரே பூரணப்படுத்தியிருந்தனர். பெற்றோர்கள் சிங்கள மொழி மூலம் கல்வி கற்றிருப்பதால் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளில் பூரணமாக அவர்களால் ஒத்துழைப்பை வழங்க முடியாமலிருந்தது.
- ஒலியமைப்பு – வாசிப்பு பயிற்சியளிக்கும் போது இம் மாணவர்கள் சிங்கள மொழி, தமிழ் மொழி கலந்து பேசும் பிரதேசத்தில் இருப்பதால் எழுத்துக்களின் உச்சரிப்பில் பொதுவாக அனைத்து மாணவர்களும் பிழை விட்டனர். இதனால் பயிற்சிகள் வழங்கும் போது பல்வேறான சிக்கல்கள் ஏற்பட்டன.
- நேரம் போதாமை – தொடர்ச்சியாக இவ் வாசிப்புப் பயிற்சிகளை வழங்கும் போது ஒவ்வொரு மாணவரையும் தனித்தனியாக மதிப்பீடு செய்து அவர்களுக்குரிய பரிகாரக் கற்பித்தல்களை தனித்தனியாக மேற்கொள்வதற்கு நேரம் போதமல் இருந்தது.

**கண்டுபிடிப்புக்களும் கலந்துரையாடலும்.**

- இவ்வாய்வின் போது மேற்கொள்ளப்பட்ட பெற்றோர் கூட்டத்தின் மூலம் பெற்றோர்களில் பெரும்பாலானோர் சிங்கள மொழி கற்றவர்கள் என்பது தெரியவந்தது. இதனால் அவர்களுக்கு தமிழ் மொழியில் பேசுவதற்கு மாத்திரமே தெரியும். எழுத்தறிவு அவர்களிடம் மிகக் குறைவாகக் காணப்பட்டது.
- பிள்ளைகளின் கற்றலில் பெற்றோரின் ஈடுபாட்டின் முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வூட்டப்பட்டது. மேலும் பிள்ளைகளின் வாசிப்புத் திறன் தொடர்பில் அவர்களின் ஈடுபாடு தொடர்பாக வினவப்பட்ட போது இப் பிள்ளைகளுக்கு வீட்டில் வாசிப்புப் பயிற்சிகள் வழங்கப்படுவதில்லை என்பது புலனாகியது. இதற்குரிய காரணத்தை அவர்களிடம் வினவப்பட்ட போது பெரும்பாலான பெற்றோர்கள் சிங்கள மொழி கற்ற பெற்றோர்களாகக் காணப்பட்டதால் அவர்களுக்கு தமிழ் மொழியில் வாசிப்பதற்கு புலமை இருக்கவில்லை.

- மாணவர்கள் வாசிக்கும் போது எழுத்துக்களை உச்சரிப்பதில் பிழைவிடுவதற்கான காரணம் அவர்களைச் சுற்றியுள்ள சமூகத்தில் பெரும்பான்மையினர் சிங்களவர்களாகக் காணப்பட்டனர். எனவே இவர்கள் வாசிக்கும் போது சிங்கள உச்சரிப்பு அதிகம் கலந்துள்ளதை அவதானிக்க முடிந்தது. இதனால் வாசிப்பில் ஒலியுணர்வில் மாணவர்கள் அதிகம் சிரமப்படுகின்றனர். மாணவர்களுக்கு ஒலி வேறுபாடுள்ள சொற்களின் கருத்துக்களை விளங்குவதிலும் சொல்வதெழுதல் போன்ற பயிற்சிகளில் அதிகம் பிழை விடுவதையும் அவதானிக்க முடிந்தது.அதே வேளை குறித்த வகுப்பில் தமிழர்கள் வசிக்கும் பிரதேசத்தில் இருந்து வரும் மாணவர்கள் எழுத்துக்களை அழகான முறையில் சரியாக உச்சரித்தனர்.
- நவீன கற்பித்தல் துணைச் சாதனங்களைப் பயன்படுத்தியதனால் மிக விரைவில் கூடிய பிரதிபலிப்புக்களைக் கண்டுகொள்ள முடிந்தது. அத்தோடு மாணவர்கள் கவர்ச்சிகரமான நவீன துணைச் சாதனங்களைப் பயன்படுத்தி வாசிப்புப் பயிற்சியளிக்கும் போது மிகவும் ஆர்வமாகக் காணப்பட்டனர்.
- இம் மாணவர்களுக்கு வீட்டில் போதியளவு வழிகாட்டல்கள் கிடைப்பதில்லை. எனவே, பாடசாலை இம் மாணவர்களுக்கான வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். அதற்கான சில ஆலோசனைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**விதப்புரைகள்**

- வெற்றிகரமான வாசித்தலை முன்னெடுப்பதற்கு சொல்வதெழுதற் பயிற்சி துணையாக இருக்கும். சொல்வதெழுதலில் பின்னடைந்துள்ளோர் வாசிப்பிலும் பின்னடைவு கொண்டவர்களாகவே இருப்பர். சொற்களுக்கும் ஒலிக்குமுள்ள தொடர்புகளை இனங்காணுவதற்கும் மீள வலியுறுத்திக்கொள்வதற்கும் சொல்வதெழுதற் பயிற்சி நேரடியான பங்களிப்பைச் செய்கின்றது. வேகமாக எழுதுதல், சரியாக எழுதுதல், கிரகித்தல், சரியான உச்சரிப்பு, எண்ணக்கருவாக்கம் முதலிய பல ஆற்றல்களை வளர்ப்பதற்கு சொல்வதெழுதற் பயிற்சி துணை செய்யும்.
- சொற்களை ஆசிரியர்கள் சரியாகவும் தெளிவாகவும் உச்சரித்து சொல்லாதவிடத்து, மாணவரின் வாசிப்புத்திறன் பாதிக்கப்படும். புதிய சொற்களை மகிழ்ச்சியுடன் கற்கும் சூழலை ஆசிரியர் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.
- முன்பள்ளி நிலையிலிருந்தே சிறாரின் வாசிப்பில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். ‘‘பின்னர் வளர்க்கலாம்’’ என்று வாசிப்புப் பயிற்சியை ஒத்தி வைத்தல் அவர்களின் அறிவு வளர்ச்சியிலும் தேடல் வளர்ச்சியிலும் மேலும் பின்னடைவுகளை ஏற்படுத்தும்.
- வாசிப்புப் போட்டி, சொல்வதெழுதல் போட்டி பேச்சுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.
- பிள்ளைகளிடத்தில் வாசிப்புத் திறன் குறைபாடு ஏற்படுவதற்கான காரணத்தை அறிவதற்கு சிறாரிடத்து அதிக பயன்பாட்டிலுள்ள சொற்களை எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் முதலில் பயிற்சியளிக்க வேண்டும். இச் சொற்களிலிருந்தே ஏனைய சொற்களுக்கு நகருதல் பொருத்தமான கற்பித்தல் முறையாகும். சில

மாணவர்களுக்கு டிஸ்லெக்ஸியா நோய் ஆனது எழுத்துக்களை இனங்காண்பதில் சிக்கலை ஏற்படுத்தும். எனவே மேற்குறிப்பிட்டவாறு பயிற்சியளிப்பதன் மூலமே இந்நிலைமைகளை அறிந்து கொள்ளலாம்.

- நவீன கற்றல் துணைச்சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும். இது தொடர்பாக பெற்றோர்களுக்கும் கருத்தரங்குகளை வைக்க வேண்டும். பெற்றோர்கள் தங்களுக்கு மொழியறிவு குறைவாக இருப்பினும் தற்போது Mobile Apps இனைப் பயன்படுத்தும் முறைகள் தொடர்பான வழிகாட்டல்களை வழங்க வேண்டும். உதாரணமாக Read Tamil, Tamil Read Easy, Tamil Word Search, வார்த்தை விளையாட்டு, தமிழ் குறுக்கெழுத்துப் போட்டி, கண்டுபிடி கண்டுபிடி, தமிழ் கதைகள் போன்ற Mobile Apps வாசிப்புக்கு மிகவும் பயனுடையவையாகும்.
- பொது வாசிப்பை வளர்க்கும் பொழுது, வாசிப்பு சார்ந்த சிறப்புத் திறன்களை மேற்கொள்ளும் முயற்சிகளையும் முன்னெடுத்தல் வேண்டும். உதாரணமாக எழுத்து வடிவங்களை இனங்காணும் திறன், சொல் மோதல், வாசிப்பில் தன்னைத் தானே நெறிகை செய்தல், சொற்கட்டமைப்பை இனங்காணல், ஒலிக்கட்டமைப்பை விளங்கிக் கொள்ளல்.
- பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு பயிற்சியளிக்கும் விடயத்தில் மிகவும் பொறுமையாக இருக்க வேண்டும். பிள்ளைகளுக்காக தங்களுடைய நேரத்தை ஒதுக்க வேண்டும். அவசரப்படுவதால் ஒழுங்கான பிரதிபலிப்பைக் காண முடியாது.
- பிள்ளைகள் எதனை வாசிப்பதில் அதிகம் ஆர்வம் எடுக்கின்றார்களோ அவ்வாறான விடயங்களை அதிகம் தொகுத்துக் கொடுக்க வேண்டும். உதாரணமாக சிறுகதைகள்.
- நாளாந்தம் பிள்ளைகள் ஈடுபாடு காட்டும் துறையைக் கண்டறிதல் வேண்டும். உதாரணமாக சமையல், தோட்டம் செய்தல், பிராணிகளை வளர்த்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதில் சமையலை எடுத்துக் கொண்டால் அவர்கள் அதிகம் விரும்பும் உணவுகளைச் செய்து கொடுப்பதற்கு சமையல் குறிப்பு புத்தகங்களை அவர்களுக்கு வழங்கி அதிலுள்ளவற்றை வாசித்து எவ்வாறு அவ்வுணவை செய்ய வேண்டும் என்று பிள்ளைகளுக்கு சொல்ல வைக்க வேண்டும். அதன் பின் தாயும் பிள்ளையும் சேர்ந்து அவ்வுணவைச் செய்ய வேண்டும். இது பிள்ளைகளை மீண்டும் மீண்டும் வாசிக்கத் தூண்டும்.
- ஆசிரியர்கள் புதுப் புதுச் சொற்களடங்கிய கைநூல்களை அத்தோடு சிறு சிறு பத்திரிகைத் துணுக்குகளைச் சேகரித்து Paper cutting Book மாணவர்களுக்குத் தயாரிப்பதற்கு வழிகாட்ட வேண்டும்.

**முடிவுரை**

இவ்வாய்வு முடிவுகளின் படி, மாணவர்களின் வாசிப்புத் திறன் பின்னடைவுக்கு முக்கிய காரணங்களில் பெற்றோரின் மொழியறிவும் பிரதேசச் சூழலும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இவ்வாசிப்புத்திறன் பின்னடைவானது மாணவர்களுடைய அடைவுமட்டத்தில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. வாசிப்புத் திறன் குறைந்த மாணவர்களிடம்


ISBN 978-624-5736-14-0

எழுத்துத் திறனும் குறைவாகவே காணப்படும். இதனால் பரீட்சைகளில் வினாக்களை விளங்கிக் கொள்ளல், சரியான விடைகளை அளிப்பதில் பல்வேறான சவால்களை எதிர்நோக்குகின்றனர். இவர்களுக்கு பாடசாலைகளில் பரிகாரக் கற்பித்தல் முறைகள் மூலம் தொடர்ந்து பயிற்சிகள் வழங்கப்படுவதன் மூலம் திருப்திகரமான மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

**உசாத்துணைகள்**


Barac, R., & Bialystok, E. (2012). Bilingual Effects on Cognitive and Linguistic Development: Role of Language, Cultural Background, and Education. *Child Development*, *83*(2), 413–422. https://doi.org/10.1111/j.1467-8624.2011.01707.x

Clyne, M. (2009). *Community Languages: The Australian Experience*. Cambridge University Press.

Committee on the Prevention of Reading Difficulties in Young Children, Behavioral, C. S. S., Education, D. B. S. S., National Research Council, Snow, C. E., Burns, M. S., Griffin, P., Children, C. P. R. D. Y., Board on Behavioral, C. S. S., & Council, N. R. (1998). *Preventing Reading Difficulties in Young Children*. Amsterdam University Press.

Lundberg, I., Frost, J., & Petersen, O. P. (1988). Effects of an Extensive Program for Stimulating Phonological Awareness in Preschool Children. *Reading Research Quarterly*, *23*(3), 263–284. https://doi.org/10.1598/rrq.23.3.1

Ouellette, G., & Beers, A. (2009). A not-so-simple view of reading: how oral vocabulary and visual-word recognition complicate the story. *Reading and Writing*, *23*(2), 189–208.

Pancsofar, N., & Vernon-Feagans, L. (2010). Fathers' early contributions to children's language development in families from low-income rural communities. *Early Childhood Research Quarterly*, *25*(4), 450–463.

Scarpino, S. E., Hammer, C. S., Goldstein, B., Rodriguez, B. L., & Lopez, L. M. (2019). Effects of Home Language, Oral Language Skills, and Cross-Linguistic Phonological Abilities on Whole-Word Proximity in Spanish-English–Speaking Children. *American Journal of Speech-Language Pathology*, *28*(1), 174–187. https://doi.org/10.1044/2018_ajslp-18-0050